# உனக்கு வீட்டை கட்டுவார்

**உன் சத்துருக்களையெல்லாம் கீழ்ப்படுத்தினேன்.**
**இப்போதும் "கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார்"**
**என்பதை உனக்கு அறிவிக்கிறேன்.** I நாளா 17 : 10

**தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன்.**
**எனக்கு சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான்.**

கிறிஸ்துவுக்குள் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே,

**அப்போ. 13 : 22** – இல் கர்த்தர் தாவீதைக் குறித்து சொன்ன சாட்சியைத்தான் மேலே தலைப்பில் காண்கிறோம். தாவீது என்ற இடத்தில் உங்கள் பெயரைப் போட்டு, விசுவாசத்தோடே, கர்த்தரை ஸ்தோத்தரித்து, ஆண்டவரே, நீர் தாவீதுக்கு அருளின இந்த மாபெரும் கிருபையை எனக்குத் தாரும் என்று ஒரு நிமிடம் கண்களை மூடி ஜெபியுங்கள்.

இயேசுவே, நான் உம்முடைய இருதயத்துக்கு ஏற்றவனாக இருக்கவும், உமக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்யவும் எனக்கு கிருபை செய்யும். ஆமென்.

அருமையானவர்களே, பொதுவாக என்னுடைய தனி ஜெபத்தில் 3 காரியங்களை அடிக்கடி கர்த்தரிடத்தில் கேட்பேன்.

மரணத்தை மகிழ்ச்சியோடு சந்திக்க வேண்டும்.
கர்த்தருடைய சித்தத்தை பூமியில் நிறைவேற்ற வேண்டும்.
எரிந்து பிரகாசிக்கின்ற விளக்காயிருக்க வேண்டும். என்பதாக.

அருமையான சகோதரனே, சகோதரியே,

உங்கள் விருப்பம், ஜெபம் என்ன ? **கர்த்தர் சொல்கிறார்.**

தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன். எனக்கு சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான். என்பதாக. தாவீது, "கர்த்தருக்கு சித்தமானவைகளையெல்லாம் செய்வான்" என கர்த்தரே சாட்சி கொடுத்தார். இன்று உங்களையும் என்னையும் குறித்து கர்த்தர் இவ்வாறு சாட்சி கொடுக்க முடியுமா ?

எப்பொழுதும் நாம் ஜெபிக்கும்பொழுது, "ஆண்டவரே உம்முடைய சித்தத்தின்படி நடத்தும்" என்று வேண்டிக்கொள்ள வேண்டும். நம்முடைய விருப்பத்தை தேவனிடத்தில் தெரிவிப்போம். ஆனால் அதே நேரத்தில் தேவனுடைய சித்தத்திற்கு பரிபூரணமாக ஒப்புக் கொடுப்போம்.

தாவீது கர்த்தருடைய இருதயத்துக்கு ஏற்றவனாயிருக்க மேலும் முக்கிய காரணங்கள் பல உண்டு.
அவைகளில் மூன்றை காண்போம்.

**1. 2 சாமு. 6 : 21,22. இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன்.**

தாவீது தன்னைத் தாழ்த்தினான். உடன்படிக்கை பெட்டி முன்னால், தன்னுடைய ராஜ வஸ்திரம் உரிந்து விழுந்தாலும் அதை பொருட்படுத்தாமல், ஆடிப்பாடினான். வேலைக்கார ஸ்திரிகள் பார்த்துக் கொண்டே இருந்தாலும் வெட்கத்தை மறந்து கர்த்தரை நடனம் ஆடி துதித்தான். சவுலின் மகள் மீகாள் தாவீதை அற்பமாக எண்ணி, காரியத்தை வெளிப்படுத்திய பொழுது, தன்னுடைய பழைய நிலையை விவரிக்கிறான். கறவலாடுகளின் பின்னே அலைந்த என்னை கர்த்தர் ராஜாவாக்கினாரே! அவர் முன்பு, இதைப் பார்க்கிலும் இன்னும் நான் நீசனும் என் பார்வைக்கு அற்பனுமாவேன் என்றான். அல்லேலுயா! அருமையானவர்களே உங்களைத் தாழ்த்துகிறீர்களா ?

**2. 2 சாமு. 12 : 23. நான் அதனிடத்துப் போவேனே அல்லாமல் அது என்னிடத்திற்கு திரும்பி வரப்போவதில்லை.**

தாவீதுக்கு பரலோக சிந்தை இருந்தது. தன்னுடைய பிள்ளையின் வியாதி நீங்க 7 நாள் உபவாசம் பண்ணி ஜெபிக்கிறான். ஆனால், பிள்ளை இறந்து போகிறது. செய்தியைக் கேள்விப்பட்டவுடன் எண்ணை தேய்த்து ஆகாரம் சாப்பிடப் போகிறான். யாவரும் ஆச்சரியப்படுகிறார்கள். இது என்ன என்று விசாரிக்கிறார்கள். அப்பொழுது தாவீது சொல்கிறார், **"நான் அதனிடத்துக்குப் போவேனே அல்லாமல், அது என்னிடத்திற்கு திரும்பி வரப் போவதில்லை"** என்பதாக.

**3. 1 நாளா. 17 : 1. நான் கேதுரு மரவீட்டிலே வாசம் செய்கிறேன். கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியோ, திரைகளின் கீழ் இருக்கிறது.**

தாவீது கர்த்தருடைய பெட்டிக்கு இருதயத்தில் முதலிடம் கொடுத்தான். தன்னுடைய உள்ளத்தில் ஒரு ஆலயத்தை கட்ட வாஞ்சித்தான். அவன் வாஞ்சையை அறிந்த தேவன், நாத்தான் தீர்க்கதரிசி மூலம் கூறுகிறார்.

**"கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார்"** என்பதாக.

அப்படியே, சந்ததி சந்ததியாக தாவீதின் குமாரனாக இயேசு பிறந்தார். கர்த்தருடைய அன்பை நினைத்து, சுரமண்டலம் வாசித்து, அநேக சங்கீதம் இஸ்ரவேலைக் குறித்துப் பாடினான். ஆதலால் கர்த்தருடைய தாசன் என தாவீது அழைக்கப்பட்டான்.

அருமையானவர்களே, உங்கள் உள்ளத்தில் கர்த்தருக்கு ஒரு ஆலயம் கட்ட வேண்டும் என்ற வாஞ்சை உண்டா ? உண்மையாக வாஞ்சித்தால், இப்போதும் "**கர்த்தர் உனக்கு ஒரு வீட்டைக் கட்டுவார்**" என்பதை உனக்கு அறிவிக்கிறேன். உங்கள் சந்ததி ஆசீர்வதிக்கப்படுவதாக!